**நவம்பர் - 2**

**"அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக." - 1சாமு 3 . 18.**

நம்முடைய மிக மேன்மையான சேமத்திற்காக எது உகந்தது என்று நாம் அறியோம். சில வேளைகளில், நாம் யாசித்துப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறதும், நல்லவைகள் என்று நாம் எண்ணுகிறதுமான காரியங்கள் உண்மையாகவே நம்முடைய பிரதிகூலத்திற்கேதுவானதாக இருக்கும். விசுவாசத்தினாலே ஒவ்வொரு சோதனையின், கஷ்டத்தின் மனக்கலக்கத்தின் இருளினுடே ஊடுருவிச் செல்லக்கூடியவர்களாகவும், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவர்" என்றும், சகலத்தையும், நன்மைக்கு ஏதுவாக நடக்கச் செய்விக்கிறார் என்றும் உணர்ந்து கொள்ளக்கூடியவர்களாயும் இருக்கிறவர்கள் பாக்கியவான்கள். நாம் கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். அவருடைய பராமரிப்பு நமக்காகக் குறிக்கிற அப்படிப்பட்ட அனுபவங்களை, நாம் சம்பந்தம் வைத்திருக்கிற அவருடைய ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் சந்தேகிக்காமல்ப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**- Z 01, 147, 317 (R 2806, 2887).**

கர்த்தரின் பராமரிப்பு, பொருத்தமான அல்லது பொருந்தாத சம்பவங்களையோ, வெகுமானத்தையோ அல்லது தண்டனையையோ கொண்டு வந்தாலும், கிறிஸ்தவன் தன்னுடைய எல்லாக்காரியங்களிலும் அதைக் கண்டு கொள்ள வேண்டும். எல்லா நிலைமையிலும், கர்த்தருடைய சித்தத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி ஏற்றுக் கொள்ளுவது பொருந்தாத அனுபவங்களில், விசேஷமாக இவைகள் சிட்சைகளாக இருக்குமானால், கஷ்டமானதாக இருக்கும். ஆனால் அப்பொழுது பணிவுடன் இருக்க அதிகமாக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், பணிவுடனில்லாதிருந்தால் முற்றிலும் மனப்பூர்வமாக பாவம் செய்வதற்கு வழிநடத்தப்பட ஏதுவாகும். இப்படிப்பட்ட நிலை பூரண அழிவை விளைவிக்கும். ஆனபோதிலும், அதிக அளவு மனப்பூர்வமான பாவங்களுக்காகத் தண்டனை பெறுவதற்குத் தகுதியாயிருந்த திரள் கூட்டத்தாருக்கு அடையாளமான ஏலியைவிட, வழிநடத்தப்பட ஒரு பார்வையே போதுமானதாயிருந்த சிறுமந்தைக்கு அடையாளமான சாமுவேலைப் போல நாம் இருப்பது நமக்கு நல்லது. **- P 33, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 26.39,42; யோவா 5.30; 6.38; பிலி 2.8; அப் 21.10-14; 1பேது 2.23, 4.19; சங் 31.5; 39.9; லூக் 23.46; யோபு 1.21; ஏசா 39.8.**

**கோபுர வாசிப்பு :- Z 13, 251 (R 5296).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாயிருந்தது எது? இடையூறாக இருந்தது எது? அதிலிருந்து விளைந்த பலன் எது?**